## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 209/2018

நாள் 23.09.2025

PW4 – M.பழனிச்சாமி

த/பெ – மாரப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of September 2025)**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது, ஆனால் கையெழுத்து மட்டும் போடுவேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல வேண்டி அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி சுந்தராம்பாள் அழைத்ததின் பேரில் தான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு தற்போது 75 வயதாகிறது. எனது அப்பா மாரப்ப கவுண்டர் ஆகும். இந்த வழக்குகள் ருக்குமணி, சுந்தராம்பாள், கமலாத்தாள் ஆகியோர்களுக்கிடையில் நடக்கிறது. வேறு யார் தரப்பினர்களாக இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. எத்தனை வழக்குகளாக இந்த நீதிமன்றத்தில் நடக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய தோட்டத்தின் பெயர் வயக்காட்டு தோட்டம். என்னுடைய தோட்டம் எங்கள் ஊரில் இருந்து தள்ளி உள்ளது. நான் எனது தோட்டத்தில் தான் வசித்து வருகிறேன். நான் ஓட்டி வரும் தோட்டம் எனக்கு சொந்தமானது தான். வாதிகள் ருக்குமணி, சுந்தராம்பாள் ஆகியோர்களை எனக்கு 20 வருடங்களாக தெரியும். வாதிகள் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தோட்டம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் அவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2. தாவா சொத்திற்கும், என்னுடைய தோட்டத்திற்கும் இடையில் நடராஜன் என்பவருடைய தோட்டம் தான் உள்ளது. அந்த இடையில் உள்ள தோட்டத்தை கல்லக்கா தோட்டம் என்று தான் சொல்லுவார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தையும் கல்லக்கா தோட்டம் என்று தான் சொல்லுவார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4.50 ஏக்கர் பரப்பு கொண்டது. தாவா சொத்தில் ஒரு கிணறு உள்ளது. தாவா சொத்தை சென்னிமலை கவுண்டர் தான் விலைக்கு வாங்கி கிணறு வெட்டி மின் இணைப்பு பெற்றார் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து சென்னிமலை கவுண்டரின் சுயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டரின் எல்லா குடும்ப விஷேத்திற்கும் நான் சென்று வருவேன் என்றால் சரிதான்.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 4-ல் சொல்லியுள்ள சென்னிமலை கவுண்டர் அவிநாசி மத்திய கூட்டுறவு சொசைட்டியில் எப்போது கடன் வாங்கினார் என்றால் 20 வருடத்திற்கு முன்பு வாங்கினார், தேதி, வருடம் எனக்கு தெரியாது. அந்த கடனை எதற்காக வாங்கினார் என்றால் அவருடைய மகனுக்கு தறிக்குடோன் வைத்து கொடுக்க வேண்டி கடன் வாங்கினார். அந்த கடனை திருப்பி கட்டாததால் தான் தாவா சொத்து ஏலத்திற்கு வந்தது என்றால் சரிதான். அந்த விபரம் வாதிகள் சொல்லி தான் எனக்கு தெரிய வந்தது. அந்த கடனை நடராஜன் திருப்பி கட்டினாரா? அல்லது வாதிகள் கட்டினார்களா? என்றால் வாதிகள் தான் அந்த கடனை திருப்பி கட்டி அடைத்தார்கள். அந்த விபரமும் வாதிகள் சொல்லி தான் எனக்குத் தெரியும். சென்னிமலை கவுண்டர் எவ்வளவு தொகை கடன் பெற்றார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. சொத்து ஏலத்திற்கு வந்த விபரத்தை சென்னிமலை கவுண்டர் என்னிடம்

சொல்லவில்லை, வாதிகள் தான் என்னிடம் சொன்னார்கள். அந்த கடனை திருப்பி கட்டி விட்டதாக வாதிகள் எப்போது என்னிடம் சொன்னார்கள் என்றால் 20 வருடத்திற்கு முன்பு சொன்னார்கள். தாவா சொத்தை நடராஜ் வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக வாதிகள் சொல்லி தான் எனக்குத் தெரிய வந்தது. தாவா சொத்தைப் பொறுத்து சென்னிமலை கவுண்டர் அவர் இருக்கும் வரையில் என்னென்ன ஆவணங்கள் எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது. அதனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 6–ல் சென்னிமலை கவுண்டர் வாதிகள் ருக்குமணி, சுந்தராம்பாள் ஆகியோருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள விபரம் வாதிகள் சொல்லி தான் எனக்குத் தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த விபரமும் வாதிகள் சொல்லி தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை யார் விலைக்கு வாங்கியுள்ளார்கள் என்றால் விலைக்கு வாங்கிய நபரின் பெயர் எனக்குத் தெரியாது. அவர் எப்போது வாங்கினார் என்றும் எனக்குத் தெரியாது. தாவா சொத்தை நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்ற விஸ்வலிங்கசாமி, நல்லி சண்முகசுந்தரம் ஆகிய இருவரையும் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமான எந்த பத்திரத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சுந்தராம்பாளின் மகனான வா.சா.3 கார்த்திகேயன் எனக்கு உறவினர் கிடையாது. தாவா சொத்து சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு முன்பு தகராறு நடந்ததாக வாதிகள் சொல்லி தான் எனக்குத் தெரியும். தாவா சொத்திற்கு திருப்பூரை சேர்ந்த லோகநாதன் என்பவர் தான் உரிமையாளர் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அந்த லோகநாதன் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. நான் சொல்வது

போல எந்தவொரு பிரச்சனையும் நடக்கவில்லை என்றும், எனக்கு தாவா சொத்தைப் பொறுத்து எந்த விபரமும் நேரடியாக தெரியாது என்றும், சொத்தை கிரையம் பெற்ற லோகநாதன் என்பவரிடமிருந்து ஆதாயம் பெற வேண்டி வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து லோகநாதனுக்கு தான் பாத்தியப்பட்டது என்றும், அதில் வாதிகளுக்கு எவ்வித பாத்திய உரிமையும், அனுபவமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் லோகநாதனின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.23 14:21:23 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**